**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 19/2024 |
| Deposition of Witness | : | PW– 6 |
| Name | : | குமார் |
| Father Name | : | ராஜீ |
| Village | : | அவிநாசிபாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 58 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.08.2021 ஆம் தேதி வெள்ளகோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்றைய தினம் வெள்ளக்கோவில் காவல் நிலைய முதல்நிலைக் காவலர் பாலகுரு என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது ராமசாமி என்பவரின் அசால்ட் இண்டிமேசன் கிடைக்கப்பெற்று காங்கேயம் அரசு மருத்துவமனை சென்று விசாரித்தபோது அவர் வீட்டிற்குச் சென்றதாக கிடைத்த தகவலின் பேரில் அவரின் வீட்டிற்குச் சென்று அவரை விசாரித்து வாக்குமூலம் புகார் பெற்று அதன் தன்மைக்கேற்ப வெள்ளகோவில் காவல் நிலைய குற்ற எண்.880/2021 சட்டப்பிரிவு 294(b), 323, 324, 447 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். (**வாக்குமூல புகார் அ.சா.ஆ.6 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின்னர் வழக்கு கோப்புகளை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 13.08.2021 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தமிழரசன் மற்றும் தங்கவேல் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **வரைபடம் அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் மாலை 18.30 மணிக்கு இவ்வழக்கின் சொத்தான 1. கைக்கு அடக்கமான இரண்டு வெங்கக் கற்கள், 2. சுமார் 76 செ.மீ நீளமுள்ள உருட்டு கட்டை ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். **(படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் சாட்சிகள் ராமசாமி, சிவக்குமார், பேபி, பழனியம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரிகளான சக்திவேல் மற்றும் கிருஷ்ண பிரசாத் ஆகியோர்கள் மாண்புமிகு திருப்பூர் மாவட்ட முதன்மை நீதி மன்றத்தில் முன் ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை.

4. பின்னர் இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பேபி மற்றும் பழனியம்மாள் ஆகியோர்களை பெண்கள் என்று பாராமல் பொது இடத்தில் வைத் து காலால் உதைத்த சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 323, 324, 447 இதச விலிருந்து 294(b), 323, 324, 447 இதச மற்றும் 4 OF TNPHW ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக, குறியீடு செய்யப்படுகிறது).**

5. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் பேபி, ராமசாமி, பழனியம்மாள் ஆகியோர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு வழங்கிய காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் கார்த்திக் ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன்.

6. மேலும் இவ்வழக்கு சம்பவத்தின் போது எதிரிகள் சாட்சிகளை கல்லாலும் உருட்டு கட்டையாலும் அடித்துள்ளார்கள். எனவே இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 323, 324, 447 இதச மற்றும் 4 OF TNPHW இருந்து 294(b), 324, 447 இதச மற்றும் 4 OF TNPHW ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல்நிலைக் காவலர் பாலகுரு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 06.09.2021 ம் தேதி வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

PAP வாய்க்கால் தண்ணீர் வருவது சம்பவத்திற்கு முன்பாக காட்டின் நடுப்பகுதியில் வந்தது என்று சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. காட்டின் ஓரப்பகுதியில் வந்தது. காட்டின் ஓரப்பகுதியில் வருவதாக பார்வை மகஜரில் எவ்வித குறிப்பும் இல்லை. அந்த வாய்க்கால் ஆனது மண் வாய்க்கால் ஆகும். அந்த வாய்க்கால் ஆனது நிலத்துடன் செல்லக்கூடியது என்றால் சரிதான். PAP வாய்க்கால் தண்ணீர் எங்கிருந்து எங்கு வருகிறது என்று விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த PAP வாய்க்கால் ஆனது ராமசாமியின் பூமியில் இருந்து எதிரியின் பூமிக்கு வருகிறதா என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த தண்ணீர் செல்லக்கூடிய பாதை ஒவ்வொரு காடாக மாறி மாறி செல்லக்கூடிய பாதை என்றால் சரிதான். ராமசாமியின் பூமிக்கு முன்பாக யார் காட்டிற்குள் சென்று வருகிறது என்றும் ராமசாமியின் காட்டிற்கு பின்னர் யார் காட்டிற்கு சென்று வருகிறது என்றும் நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மண் வாய்க்காலை அ.சா.1 முதல் 3 நபர்களே பிரித்துக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி நான் தெரிந்து கொள்ளவில்லை. அ.சா.1 முதல் 3 நபர்களும் மருத்துவ சிகிச்சைக்கு சேர்ந்த நேரம் வேறு வேறு என்றால் சரிதான். அவர்கள் மூன்று நபரும் ஒரே

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பார்வை மகஜரை சிறப்பு உதவி ஆய்வாளராகிய நான்தான் தயாரித்தேன். கான்ஸ்டபுள் பார்வை மகஜர் தயாரித்ததாக சொல்லியிருந்தால் அது தவறாகும். பார்வை மகஜர் சாட்சிகளுக்கு சான்று பொருட்களை நான்தான் அடையாளம் காட்டினேன். பார்வை மகஜர் சாட்சியில் ஒரு நபர் வெளியூர்காரர் ஆவார். மருத்துவரை 06.09.2021 ஆம் தேதிதான் விசாரித்தேன். அதற்கு முன்பாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளராக 13.08.2021 ஆம் தேதிதான் மருத்துவரை விசாரித்ததாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 06.09.2021 ஆம் தேதி நான் மருத்துவரை எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மூன்று நபர்களும் மேல் சிகிச்சைக்கு செல்லாமல் தன்னிச்சையாக சென்றுள்ளார் என்பதால் காயத்தின் தன்மை குறித்து குறிப்பிட்டு கூறஇயலாது என்று குறிப்பிட்டு தனித்தனியே காயச்சான்று வழங்கியுள்ளார் என்று எனது விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 முதல் 3 நபர்களும் மேல் சிகிச்சைக்கு சேரவில்லை என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எதிரிகள் அ.சா.1 யை எவ்வித தாக்குதலும் செய்யவில்லை என்றும், அ.சா.1 முதல் 3 நபர்களின் பூமியில் PAP வாய்க்காலின் வழித்தடத்தை அவர்களே மாற்றி அமைத்து அவர்களின் பூமிக்குள்ளேயே வாய்க்காலினை எதிரிகளின் அனுமதி இல்லாமல் மாற்றி அமைத்துக்கொண்டார் என்றும் அது குறித்து கேட்க சென்ற எதிரியிடம் வீண் தகராறு செய்துவிட்டு மருத்துவமனைக்க சிகிச்சைக்கு சேர்ந்து பொய்யாக எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்து வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.20 17:29:03 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்